பள்ளிக்கரணை பேரூராட்சி
சென்னை – 600 100

*ந.க.எண்541/10* *நாள் 25.10.2010*

# 1998ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ்
## ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

பள்ளிக்கரணை பேரூராட்சியில் 2010–11ஆம் ஆண்டு பொதுநிதியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2010–ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இப்பேரூராட்சி அலுவலகத்தில் 23.11.2010 செவ்வாய் கிழமை மாலை 3:00 மணி வரை உரிய தொகையினை ரொக்கமாக மட்டுமே செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் முன் வைப்புத் தொகையை 23.11.2010அன்று மாலை 5:00 மணிக்குள் செலுத்தி உரிய ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். மேலும், பணிகள் தொடர்பான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

## பொது நிதிப் பணிகள் - 2010-11

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவம் தொகை | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| | **தார்சாலைகள்** | | | | |
| 1 | மீனாட்சி புரம் 1வது மற்றும் 2வது தெரு தார்சாலை அமைத்தல் | 950000 | 9500 | 1680 | 30 நாட்கள் |
| 2 | மனோகர் நகர் 10வது, 11வது, 12வது, 13வது, 14வது மற்றும் 16வது தெரு தார்சாலை அமைத்தல் | 890000 | 8900 | 1680 | 30 நாட்கள் |
| 3 | சிண்டிகேட் பேங்க் காலனி மெயின் ரோடு இயந்திரம் மூலம் தார்சாலை அமைத்தல் | 670000 | 6700 | 1680 | 30 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | அண்ணா எம்.ஜி.ஆர். நகர், ஐயப்பன் தெரு, காந்தி தெரு, ராஜீவ் காந்தி தெரு, பாரி தெரு, பாரி குறுக்கு தெரு மற்றும் இந்திரா காந்தி தெரு தார்சாலை அமைத்தல் | 1330000 | 13300 | 6720 | 30 நாட்கள் |
| 5 | அண்ணா எம்.ஜி.ஆர். நகர் என்.எஸ்.கே. தெரு, திருவள்ளுவர் தெரு, நேரு தெரு, பாரதிதாசன் தெரு, சோழன் தெரு, பூங்காவனத்தம்மன் கோயில் தெரு, கம்பர் தெரு, பாரதியார் தெரு, இளங்கோ தெரு மற்றும் காளிதாசன் தெரு தார்சாலை அமைத்தல் | 1200000 | 12000 | 6720 | 30 நாட்கள் |
| 6 | மனோகர் நகர் விரிவு, வி.ஜி.பி. சாந்தி நகர் வ.ஊ.சி. தெரு தார்சாலை அமைத்தல் | 860000 | 8600 | 1680 | 30 நாட்கள் |
| 7 | சபரி நகர், வி.ஜி.பி. வள்ளலார் தெரு மற்றும் இளங்கோ தெரு விரிவு தார்சாலை அமைத்தல் | 1075000 | 10750 | 6720 | 30 நாட்கள் |
| 8 | வார்டு எண். 5 கவிமணி 2வது மெயின் ரோடு, சர்ச் அவென்யூ மற்றும் சர்ச் அவென்யூ குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 590000 | 5900 | 1680 | 30 நாட்கள் |
| 9 | பெரியார் நகர் 2வது குறுக்கு தெரு, புகழேந்தி தெரு, ஆதிசாமி நகர், தனம் நகர் தார்சாலை அமைத்தல் | 1420000 | 14200 | 6720 | 30 நாட்கள் |
| 10 | வார்டு எண். 5 டிராபிக்கல் அவென்யூ மற்றும் லேபர் காலனி 6வது தெரு தார்சாலை அமைத்தல் | 1170000 | 11700 | 6720 | 30 நாட்கள் |
| 11 | வார்டு எண்.5 வி.ஜி.பி சாந்தி நகர் விரிவு, 3வது குறுக்கு தெரு, வெங்கடேஸ்வரா நகர் மற்றும் மல்லிகேஸ்வரன் நகர் தார்சாலை அமைத்தல் | 1275000 | 12750 | 6720 | 30 நாட்கள் |
| 12 | வார்டு எண்.6 செல்வம் நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 470000 | 4700 | 840 | 30 நாட்கள் |
| 13 | வார்டு எண்.7 ராஜலஷ்மி நகர் 2வது மெயின் ரோடு, கிருஷ்ணா நகர், காமாட்சி காலனி மற்றும் ஸ்ரீ பாலாஜி நகர் 1வது மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 1785000 | 17850 | 6720 | 30 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | மீனாட்சி நகர் மெயின் ரோடு, வள்ளல் பாரி நகர் மெயின் ரோடு மற்றும் வள்ளல் பாரி நகர் 10வது தெரு தார்சாலை அமைத்தல் | 845000 | 8450 | 1680 | 30 நாட்கள் |
| 15 | ராஜலஷ்மி நகர் 9வது தெரு மற்றும் விரிவு, 8வது தெரு, வள்ளல் பாரி நகர் 5வது, 16வது மற்றும் 20வது தெரு மீனாட்சி நகர் 3வது தெரு மற்றும் கோவலன் நகர் 6வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 990000 | 9900 | 1680 | 30 நாட்கள் |
| 16 | வள்ளல் பாரி நகர் 12வது, 13வது தெரு மற்றும் 14வது தெரு முதல் ஸ்ரீ நகர் வரை தார்சாலை அமைத்தல் | 1020000 | 10200 | 6720 | 30 நாட்கள் |
| 17 | விவேகானந்தர் நகர் (3வது மெயின் ரோடு, 8,9 மற்றும் 10வது தெரு) மற்றும் சாய் கணேஷ் நகர் (4வது மெயின் ரோடு, 1,7,8,14,15 மற்றும்16வது) தெரு தார்சாலை அமைத்தல் | 1380000 | 13800 | 6720 | 30 நாட்கள் |
| 18 | பாரதிதாசன் 2வது தெரு மற்றும் கக்கன்ஜி தெரு தார்சாலை அமைத்தல் | 890000 | 8900 | 1680 | 30 நாட்கள் |
| 19 | அம்பாள் நகர் (அம்பாள் நகர் முதல் மெயின் ரோடு, முதல் மெயின் விரிவு, 1 முதல் 5 குறுக்கு தெருக்கள்) தார்சலை அமைத்தல் | 1200000 | 12000 | 6720 | 30 நாட்கள் |
| 20 | பிரபு நகர் மற்றும் கணபதி நகர் தார்சலை அமைத்தல் | 640000 | 6400 | 1680 | 30 நாட்கள் |
| 21 | பால அம்புகன் நகர் மற்றும் ஸ்ரீ நகர் மெயின் ரோடு மற்றும் 1வது, 2வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 1350000 | 13500 | 6720 | 30 நாட்கள் |
| 22 | வார்டு எண்.15 தாய் நகர் தார்சாலை அமைத்தல் | 450000 | 4500 | 840 | 30 நாட்கள் |
| 23 | மேற்கு அண்ணா நகர் 1, 4, 5, 8, 10 மற்றும் 12வது தெருக்கள் தார்சாலை அமைத்தல் | 1450000 | 14500 | 6720 | 30 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | தந்தை பெரியார் நகர் காமராஜர் தெரு, ஜெயலலிதா தெரு, நேரு, தெரு, இந்திரா தெரு, அவ்வையார் தெரு, அகத்தியர் தெரு, இளங்கோ தெரு, கண்ணபிரான் தெரு தார்சாலை அமைத்தல் | 1825000 | 18250 | 6720 | 30 நாட்கள் |
| | **மொத்தம்** | **25725000** | | | |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குபவர்கள் பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருக்க வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குபவர்கள் பணியின் பெயர் தெளிவாக எழுதி மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வழங்க வேண்டும்.
3. எக்காரணத்தைக் கொண்டும் பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்யாதவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் (ஷெட்யூல் பார்ம்) வழங்கப்பட்ட மாட்டாது.
4. ஒப்பந்ததாரர்கள் பணிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஷெட்டியூல்க்கான கட்டணத்தை ரொக்கமாக செலுத்தி 23.11.2010ம் செவ்வாய் கிழமை மாலை 3:00 மணி வரையில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பணிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக டேவணித் தொகை ரொக்கமாக 23.11.2010ம் செவ்வாய் கிழமை பிற்பகல் 5:00 மணி வரையில் அலுவலகத்தில் செலுத்திய ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.
6. டேவணித் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகளை எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்ட காலவரைக்குள் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். காலங்கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகரித்து தகவல் கிடைக்கப்பெற்று மூன்று தினங்களுக்குள் ரூ.20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுதி கையொப்பம் இட்டுக் கொடுக்க வேண்டும். அதன் பிறகு தான் வேலைகளுக்கான உத்தரவு வழங்கப்படும்.
9. பணி உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலரை அணுகி விவரங்களை நன்கு அறிந்துக் கொண்டு வேலையை ஆரம்பித்து பணி முடிக்க வேண்டிய காலத்திற்குள் செய்து முடிக்கப்பட வேண்டும்.
10. வேலையை, வேலை உத்தரவு வழங்க வழங்கப்பட்ட கால கெடுவிற்குள் வேலையை செய்ய தவறினால் நாளொன்றுக்கு ரூ.100/- வீதம் அபராத தொகை வசூலிக்கப்படும்.
11. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.

12. பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அல்லது பொறியாளர்களின் அறிவுரைப்படி செய்ய தவறினாலோ முன் வைப்புத் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் இவ்வேலைகளுக்கு மறு ஒப்பந்தம் கோரி அதனால் ஏற்படும் சகல இழுப்பும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
13. பணி செய்ய அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்வதோ அல்லது வேறு நபருக்கு மாற்றுவதோ கூடாது.
14. மதிப்பீட்டில் கண்டுள்ளபடி பணியை திருப்தியாக நல்ல முறையில் செய்யவில்லை எனில் செய்த வேலைக்குரிய தொகை வழங்கப்படமாட்டாது.
15. பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு வரையறுக்கப்பட்ட வரம்பிற்கு மேல் உள்ள தொகைக்கு வேலைகளை வழங்கப்பட மாட்டாது.
16. மதிப்பீடு விகிதத்திற்கு 10 சதவீதத்திற்கு மேலும், அல்லது குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்து எடுக்கப்படும் வேலைகளுக்கு 10 சதவீதம் கூடுதல் வைப்புத் தொகை ஒப்பந்ததாரர் கண்டிப்பாக செலுத்திய பிறகு அவ்வேலைகளுக்கு உரிய உத்தரவு வழங்கப்படும்.
17. வேலைகள் துவங்குவதற்கு முன்பு பணி ஆய்வாளர் மற்றும் செயல் அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
18. முடிக்கப்பட்ட பணிக்கு பட்டியல் தொகையில் காப்புத் தொகை அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வருமான வரி, விற்பனை வரி மற்றும் அரசின் மூலம் அறிவிக்கப்படும் வரிகள் பிடித்தம் செய்யப்படும்.
19. குடிநீர் பணிகளுக்கு ஒப்பந்ததாரே சொந்த செலவில் தரமான ISI முத்திரையுடன் பி.வி.சி குழாய்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கி பயன்படுத்த வேண்டும் மேலும் கட்டிட பணிகளுக்கான இரும்பு கம்பிகள் மற்றும் சிமெண்ட் ஆகியவை ஒப்பந்ததாரரே வாங்கி பயன்படுத்த வேண்டும்.
20. சிமெண்ட் இனங்களுக்கு நடைமுறை விதிகளின்படி சோதனை அறிக்கை (Test Report) கண்டிப்பாக பெறப்பட வேண்டும்.
21. பணிகள் முடிவு பெற்று அதற்குரிய அளவும், மேலளவுகள் எடுக்கப்பட்டு பொறியாளர்களால் முறையாக மதிப்பீடு சான்றிதழ் கொடுத்த பிறகு பட்டியல்படி தொகை வழங்க வகை செய்யப்படும்.
22. செலுத்தப்படும் வைப்புத் தொகைக்கு எந்தவிதமான வட்டியும் வழங்கப்படமாட்டாது எனவும், மேற்படி பணி செய்யப்பட்டு அதற்கான தணிக்கை முடிந்த பிறகு தடையேதும் இல்லையென அறிக்கை கிடைத்தப்பிறகே செலுத்திய டேவணி தொகை திருப்பி வழங்கப்பட வேண்டும்.
23. பணி செய்து முடிக்கப்பட்ட பின்னர், பட்டியல் தொகை பெறுவதற்கு முன்பாக மதிப்பீட்டுத் தொகையில் 0.3% சதவீதத் தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலநிதி, சென்னை என்ற முகவரிக்கு (Manual Workers General Welfare Fund of the TNCWW Board, Chennai) வங்கி கேட்பு வரைவோலை மூலமாக எடுத்து செயல் அலுவலரிடம் ஒப்படைத்து பட்டியலுக்கான தொகை கோடிட்ட காசோலை மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும.

24. தார்சாலை பணிகளுக்கு தேவையான 80 / 100 சீலிட்ட தார் ஒப்பந்தாரரே தன் சொந்த செலவில் வாங்கி பயன்படுத்த வேண்டும். இந்தியன் ஆயீல் கார்ப்பரேசன் நிறுவனத்தில் தார் வாங்கியமைக்கான அசல் பட்டியல் சமர்பிக்கப்படவேண்டும்
25. மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னணு (Digital Signature) ஒப்பம் மூலம் http://tntenders.gov.in இணையதளத்தில் சமர்ப்பிக்கலாம்.
26. மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் http://townpanchayats.tn.gov.in/tender இணையதளத்தில் பதிவிரக்கம் செய்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்
பள்ளிக்கரணை பேரூராட்சி
சென்னை - 600 100

பெறுநர் : அனைத்து பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர்கள்
பள்ளிக்கரணை பேரூராட்சி

நகல் :

1. இயக்குநர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை–108 அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், காஞ்சிபுரம் அவர்களின் தகவலுக்காக.
5. இளநிலைப்பொறியாளர், பள்ளிக்கரணை பேரூராட்சி சோழங்கநல்லூர் தலைமையகம் அவர்களின் தகவலுக்காக
6. சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் தொகுதி அவர்களின் மேலான தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
7. தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் மேலான தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
8. தலைவர், துணைத்தலைவர் மற்றும் அனைத்து வார்டு உறுப்பினர்கள், பள்ளிக்கரணை பேரூராட்சி
9. செயல் அலுவலர்கள் செம்பாக்கம், மாடம்பாக்கம், சோழங்கநல்லூர், பெருங்குடி, சிட்லபாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, திருநீர்மலை ஆகிய பேரூராட்சிகள் தங்கள் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
10. அலுவலக விளம்பர பலகைக்கு